Search Warrant | கருவறைத் தீண்டாமை | Chief Ministers Office - Jayalalitha is Right

# லாயர்ஸ் லைன்

Vol: II - Issue: 20 - July: 2013 www.lawyersline.net Rs.25/-




## நீதித்துறை Vs காவல்துறை

# எங்கே நீதி?

## LL.B. வழக்கறிஞர்கள் வழக்காட முடியுமா?

# அதிகார ஆவணத்தை யார் எழுதலாம்?



R.கிருஷ்ணமூர்த்தி
M.A(police administration). B.L

தனக்குள்ள அதிகாரங்களை முகவர்களுக்கு எழுதிக் கொடுக்கும் பொழுது அதிகாரம் கொடுப்பவர்கள் சுய நினைவுடனும், யாருடைய தூண்டுதல் இல்லாமலும், முழுமன சம்மதத்துடன் அதிகார ஆவணங்களை எழுத வேண்டும், இல்லையென்றால் அதிகார ஆவணம் செல்லாது.

அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கும் நபரிடம் பணம் வங்கியில் இருப்பதை தெரிந்துக் கொண்டோ (அ) அதிகார ஆவணம் எழுதி கொடுப்பவர் மேல் சொத்து இருப்பதை தெரிந்துக் கொண்டோ அவரை மிரட்டியோ, பயமுறுத்தியோ அதிகார ஆவணம் எழுதி வாங்கும் பட்சத்தில், அதிகார ஆவணம் எழுதி கொடுத்தவர் வங்கியின் மேலாளரிடமோ (அ) காவல் துறையிடமோ புகார் அளிப்பதோடு வங்கி மேலாளருக்கு கடிதம் மூலமாகவோ (அ) நேரடியா கவோ சென்று சொல்லலாம்.

அதிகார ஆவணம் எழுதி அதை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கும் நபரே அதை ரத்து செய்துவிட்டால் அப்படி மிரட்டியோ பயமுறுத்தியோ வாங்கிய அதிகார ஆவணம் செல்லாது மறுபடியும் மிரட்டுவார்கள் என்று நினைக்கும் பட்சத்தில் காவல் நிலையத்தில் புகார் அளித்து காவல் துறையின் உதவியையும் நாடலாம். அதிகார ஆவணம் எழுதி தர சொல்லி மிரட்டிய நபர்களின் மேல் குற்றவியல் வழக்கு பதிவு செய்து தண்டனையும் வாங்கி கொடுக்கலாம்.

**மனநிலை சரியில்லாதவர்களிடம் அதிகார ஆவணம் வாங்கினால் செல்லுமா?**

ஒரு குடும்பத்தில் தந்தையோ, தாத்தாவோ சொத்தை வாங்கி அனுபவித்துவிட்டு அவர் இறந்துவிட்ட சமயத்தில் குடும்பத்திலுள்ள வாரிசுதாரர்கள் அனைவரும் சேர்ந்து அதிகார ஆவணம் எழுதி கொடுக்கும் பட்சத்தில் அந்த வாரிசுதாரர்களில் யாராவது மனநிலை சரியில்லாமல் இருந்து அவரையும் ஒரு அதிகார ஆவணம் கொடுப்பவராக சேர்த்து அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்து அந்த அதிகார ஆவணத்தை வைத்துக்கொண்டு சொத்தை விற்றாலோ (அ) அதிகார ஆவணத்தை கொண்டு செய்யும் எந்த ஒரு செயலும் செல்லத்தக்கதல்ல.

அப்படி மனநிலை சரியில்லாதவரிடம் அதிகார ஆவணம் எழுதி வாங்குவது தவறு மட்டுமல்ல இந்திய சட்டத்தின் மூலம் தண்டிக்க வேண்டிய குற்றமாகவும் கருதப்படுகிறது.

ஒருவர் சுய நினைவுடன் சொத்தை வாங்கி அனுபவித்து கொண்டு இருக்கும் போது எதோவொரு காரணத்திற்காக அவர் மனநிலை சரியில்லாமல் போகும் பட்சத்தில் அவரிடம் அதிகார ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டு சொத்தை விற்றுவிட்டாலோ (அ) விற்க முயற்சி செய்தாலோ அது செல்லாது அப்படி விற்கப்படும் சொத்து என்றைக்கும் பிரச்சினையே.




**நிறுவனம் அதிகார ஆவணம் எழுதி கொடுக்கலாமா?**

ஒரு நிறுவனம் அதிகார ஆவணங்களை எழுதும் போது அந்த நிறுவனத்திற்காக எழுதப்பட்ட AOA ( Article of Association) என்பதில் நிறுவனம் அதிகார ஆவணங்களை எழுதி கொடுக்கலாம் என்ற வாசகம் கட்டாயம் இருக்க வேண்டும், அப்படி எழுதி கொடுக்கும் போது எந்த மாதிரியான நடைமுறைகளை நிறுவனம் கையாள வேண்டும் என்ற நிபந்தனைகளை ஆராய்ந்து பார்த்து தான் நிறுவனம் அதிகார ஆவணங்களை எழுதி கொடுக்க முடியும்.

நிறுவனம் சொத்தை வாங்கவோ (அ) விற்கவோ செய்யும் பட்சத்தில் AOA ( Article of Association) யில் இந்த நிறுவனம் சொத்துகளை வாங்கலாம் விற்கலாம் என்ற வாசகம் இருந்தால் மட்டுமே அந்த நிறுவனம் விற்கவோ (அ) வாங்கவோ செய்ய முடியும். அப்படி வாங்கும் (அ) விற்கும் பட்சத்தில் அதிகார ஆவணத்தை கொண்டு செய்யலாம் என்றும் இருக்க வேண்டும். அப்பொழுது அதிகார ஆவணங்களை எழுதி தர முடியும்.

ஒரு நிறுவனம் வாங்கிய சொத்தைவிற்க நினைக்கும் போது முக்கியமாக சில நடைமுறைகளை கையாள வேண்டும்.

அதில் முக்கியமாக Resolution ஒன்றை போட்டு அதன் மூலம் ஒரு நபரை தேர்ந்தெடுத்து அவர் மூலம் அதிகார ஆவணத்தை எழுதிக் கொடுக்க வேண்டும். இவ்வாறு நடைமுறைகளை கையாண்டு எழுதி வைக்கும் அதிகார ஆவணங்களை கொண்டு சொத்தை விற்பனைச் செய்யும் பட்சத்தில் தான் விற்பனை ஆவணங்கள் செல்லும். இல்லையென்றால் அதிகார ஆவணங்களை கொண்டு செய்யும் எந்தவொரு செயலும் செல்லாது.

எனவே மேற்சொன்ன விஷயங்களை சரியாக கடைப்பிடித்து அதிகார ஆவணங்களை கொண்டு வாங்கும் சொத்துக்கள் தான் முறையானது ஆகும். அப்படியில்லாமல் தவறான வழியில் அதாவது அபகரிக்கும் விதத்தில், அதிகார ஆவணத்தை வாங்கி அதன் மூலம் லாபம் ஈட்டலாம் என்று நினைப்பவர்களுக்கு “யானை தன் தலைமேல் தானே மண்ணை போட்டுக் கொண்ட கதை தான்!’